முதன்மை மாவட்ட நீதிமன்றம், திருவாரூர்

O.S. No.20/2023

2025-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 06 ஆம் நாள் புதன்கிழமை

1969-ம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 44-ன்படி பிரமாணம் செய்விக்கப்பட்டது.

**வா.சா. 2**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | எழிலரசி | கணவர் பெயர் | சத்தியசீலன் |
| கிராமம் | நடுகந்தன்குடி | வட்டம் | |
| தொழில் | | வயது | 46 |

**(சாட்சியின் அடையாளம் சரிபார்க்கப்பட்டது).**

**முதல் விசாரணை**

நான் அசல் வழக்கில் 3-ம் தரப்பினர். நீதிமன்ற அழைப்பாணை பெற்று சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். 1.நான் மேலே கண்ட வழக்கில் தரப்பினரல்ல 3 ம் நபராவேன். வழக்கு விபரங்களை அறிய வருகிறேன். 2. என் தாயார் புஷ்பவல்லி என்பவருக்கு இவ்வழக்கின் 2 ம் பிரதிவாதியான அன்பரசன் என்ற மகனும் தமிழரசி, கலையரசி, (வாதி) மற்றும் எழிலரசி (நான்) என்ற மூன்று மகள்களும் உண்டு, என தந்தையார் சீமான் 2003 ம் ஆண்டிலேயே காலமாகிவிட்டார். நானும் என் மற்ற சகோதரிகளும் திருமணமாகி எங்கள் கணவன்மார்களுடன் தனியே இல்லறம் நடத்தி வருகிறோம். 3.இப்பால் தாவாவில் கண்டுள்ள நஞ்சை நிலங்கள்

ஆதியில் என் தாய் வழி பாட்டியான அங்காளம்மைக்கு சொந்தமாக இருந்துள்ளது. அவர் சொத்தை பொறுத்து எவ்வித ஏற்பாடும் செய்து வைக்காமல் சென்ற 2001ம் ஆண்டில் காலமான பிறகு தாவா சொத்து அவரின் ஒரே மகளான என் தாயார் புஷ்பவல்லிக்கு இந்து வரிசு உரிமை சட்டத்தின்படி கிடைத்தது. அவர் ஏகதேசமாக அனுபவித்து வந்து இப்பால் அவர் வாதி கலையரசி மீது கொண்ட அன்பினாலும் அபிமானத்தாலும் வாதிக்கும் சென்ற 12.04.2022 தேதியிட்ட பதிவான தான செட்டில்மெண்ட பத்திரம் மூலம் கொடுத்து சொத்தின் அனுபவத்தையும் வாதி வசமே விட்டுவிட்டார். 4.செட்டில்மெண்ட் தேதியிலேயே சொத்து அனுபோகம் எடுத்துக்கொண்ட என் சகோதரி கலையரசி நிலங்களில் நெல் சாகுபடி செய்ததுடன் கோடைகால பயிரான பருத்தியும் போட்டு அனுபவித்து வருகிறார். நான் உள்ளூரிலேயே இருப்பதால் வாதி அனுபோகத்தில் தாவா சொத்துக்கள் உள்ள விபரம் எனக்கு நேரிடையாக தெரியும். 5. என் பாட்டியாரான அங்காளம்மை தாவா சொத்துக்களை பொறுத்து எவ்வித ஏற்பாடும் எழுத்து மூலமாக செய்யவில்லை என்பது எனக்கு தெரியும். என் சகோதரர் அன்பரசன் மகனான முதல் பிரதிவாதி இனியவனுக்கு ஏதோ 13.03.2001 ல் உயில் ஆவண மூலம் அங்காளம்மை உரிமை ஏற்படுத்தி வைத்ததாக பிரதிவாதிகள் சொல்லியிருப்பது உண்மையல்ல. அங்காளம்மை உயிருடன் இருந்தவரை என் தாயார் புஷ்பவல்லி பராமரிப்பிலேயே இருந்து வந்ததும் எனக்கு தெரியும். நானும் 2005ம் ஆண்டு எனக்கு திருமணமாகும் வரை என் தாயார் புஷ்பவல்லியுடன் வசித்து வந்தேன். அங்காளம்மை இறக்கும் வரை மகள் புஷ்பவல்லியுடனே தான் இருந்து

வந்தார். 6.நானும் என் கணவரான சத்தியசீலனும் என் தாயார் புஷ்பவல்லி 12.04.2022 ல் எழுதி பதிவு செய்து வைத்த செட்டில்மெண்ட் ஆவணத்தின் சாட்சிகளாக கையொப்பமிட்டுள்ளோம். 7. மேலும் தான செட்டில்மெண்ட் பத்திரத்திற்கான பதிவு கட்டணம் ரூபாய்.4350/- என் தாயார் புஷ்பவல்லியே பதிவு அலுவலகத்தில் கட்டி ரசீது பெற்றுள்ளார்.

**குறுக்கு விசாரணை**

தற்சமயம் இல்லை.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2025.08.06 15:54:38 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,

திருவாரூர்.